

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.1.2025 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி, சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொது மக்களிடம் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.1.2025 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி, சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த பொது மக்களிடம் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி, 14.1.2025 அன்று முகாம் அலுவலகத்திற்கு, குடும்பத்தினருடன் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் தொண்டர்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்தார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5, 8 – இல் ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 5 | கரூர் | பிரேம் மஹால், சேலம் புறவழிச் சாலை, கரூர். |
| | | | அரவக்குறிச்சி | |
| | | | கிருஷ்ணராயபுரம் | |
| | | | குளித்தலை | |
| | காலை 10.00 மணி | 8 | பரமக்குடி | ஏ.பி.ஷா மஹால், உலகநாதபுரம், பரமக்குடி. |
| | மாலை 3.00 மணி | | முதுகுளத்தூர் | யாதவர் திருமண மஹால், முதுகுளத்தூர். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டத்தின்கீழ் பணியாற்றும்

# கிராமப்புறக் குடும்பங்களுக்கு ஊதிய நிலுவைத் தொகை வழங்கிட நிதியை விடுவித்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம்!

**சென்னை, ஜன.17-**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் கிராமப்புற குடும்பங்களுக்கு ஊதிய நிலுவைத் தொகையை வழங்கும் பொருட்டு நிதியை விடுவிக்க ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறு வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு 13-1-2025 அன்று கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டம் (MGNREGS) என்பது கிராமப்புற இந்தியாவிற்கான ஒரு முக்கியமான ஊதிய வேலைவாய்ப்புத் திட்டமாகும், இது கிராமப்புற குடும்பங்க ளுக்கு வாழ்வாதாரமாக செயல்படுத்துவது மட்டுமல்லாமல், கிராமியப் பகுதிகளில் நீடித்த மற்றும் நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குகிறது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தொடங்கப்பட்ட நாள் முதல் தேசிய அளவில் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் பல்வேறு அளவுகோல்களில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாட்டில் 76 இலட்சம் குடும்பங் களைச் சேர்ந்த சுமார் 91 இலட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் தீவிரமாகப் பங்கேற்று வருகின்றனர் என்றும், 86% வேலை வாய்ப்பு பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் கிட்டத்தட்ட 29% தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம் என்றும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1 லட்சம் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் 2024-25ஆம் ஆண்டில், 06.01.2025 வரை 20 கோடி மனித உழைப்பு நாட்களாக இருந்த நிலையில், தமிழ்நாடு ஏற்கனவே 23.36 கோடி மனித உழைப்பு நாட்களை எட்டியுள்ளது என்றும் தமிழ்நாட்டிற்கான தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தை 20 கோடி மனித சக்தி நாட்களிலிருந்து 35 கோடி மனித சக்தி நாட்களாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏற்கனவே 23.11.2024 அன்று ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதலுக்காக காத்திருக்கிறது என்றும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தின்படி ஊதிய நிதி முற்றிலும் தீர்ந்து விட்டதால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் தமிழ்நாடு தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக 1,056 கோடி ரூபாய் ஊதியம் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதையும் முதலமைச்சர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களின் முதன்மையான மற்றும் முக்கியமானதுமானதுமான அறுவடைத் திருநாளான பொங்கல் பண்டிகை, ஜனவரி இரண்டாம் வாரத்தில் தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்படுகிறது என்பதை தாம் சுட்டிக்காட்ட விரும்புவதாகவும், இத்திட்டத்தின் கீழ் கடினமாக உழைத்த தொழிலாளர்களுக்கு ஊதியத்திற்கான நிதி விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதுவரை நிலுவையில் உள்ள ரூ.1.056 கோடி ஊதிய நிலுவைத் தொகையை விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறு இந்தியப் பிரதமரை தாம் கேட்டுக்கொள்வதாகவும், தமிழ்நாட்டில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்திற்கு முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்டதைப் போன்று ஒப்புதல் அளிக்கவேண்டும் என்றும் தமது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில்!

# உயிரிழந்த மாடுபிடி வீரர் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, ஜன.17-*

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு -

ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த அவரது அறிவிப்பு வருமாறு:-

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் 14.01.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், விளாங்குடியைச் சேர்ந்த நவீன்குமார் என்ற மாடுபிடி வீரர் மாடு முட்டியதில் காயமடைந்து உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி ஊராட்சியில் கனிம வள நிதி ரூபாய் 20 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட புதிய குடிதண்ணீர் திட்டத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் மகேஸ்வரி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர். முன்னதாக ஊர் பொதுமக்கள் சார்பாக அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பிரம்மாண்டமான மாலை அணிவிக்கப்பட்டது.



திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், சுள்ளெறும்பில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழா கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், ரொக்கப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்கினார். அருகில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், ஒன்றிய செயலாளர் மணி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சின்னு என்ற முருகன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.